# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2021.10.07 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## ஒதுக்கீடு (திருத்தம்)

**2020 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நிதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

***2 ஆவது வாசகம் :*** *இவ்வாசகம் 2020 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது இரண்டாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றேழு பில்லியன் ரூபாவான கடன்பெறும் எல்லையை மூவாயிரத்து முந்நூற்றித் தொண்ணூற்றேழு பில்லியன் ரூபாவாக அதிகரிப்பதாகும்.*

*ச.வ - ஒ. 57/2021*

## 2020 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகும்:-

*சுருக்கப் பெயர்*

**1**. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின்   ஆம் இலக்க, ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2020 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2**. இரண்டாயிரத்து இருபதாமாண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ‘‘இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றேழு பில்லியன் ரூபாவை’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக ‘‘மூவாயிரத்து முந்நூற்றி தொண்ணூற்றேழு பில்லியன் ரூபாவை’’ என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.